பொது சன நூலகம்

விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 தை 29 றவி ஆகிர் 16 இதழ் 1
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11 2 82

ஹோட்டல்
றிவேக்கா
HOTEL
RIVECAH
ஐஸ்கிறீம், குளிர்பானங்கள்,
புரியாணி, நூடில்ஸ், இடியப்பம்,
சாப்பாடு, பட்டர் கேக்
மற்றும் சிற்றுண்டி வகைகளுக்கும்
ஓடர்கள் உடன்கவனிக்கப்படும்
330, ஆஸ்பத்திரி வீதி—யாழ்ப்பாணம்
போன்: 480
[2236]

## பாடசாலை பிள்ளைகள் காப்புறுதி

(கொழும்பு)

பாடசாலைப் பிள்ளைகளுக்கான காப்புறுதித்திட்டமொன்று கல்வி அமைச்சினல் விரைவில் நாடுபூராவும் அமுல் செய்யப்படவுள்ளது.

பாடசாலைப் பிள்ளைகள் வீதி விபத்துக்களில் சிக்குவது அதிகரித்துவருவதால் விபத்திற்குள்ளாகும் பிள்ளைகளின் நலன்கருதியே 'இக்காப்புறுதித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது

எனத் 8-ம் பக்கம் பார்க்க)

★ யாழ். மாவட்டத்தில்

# 91 விசேட சேவை அலுவலர் நியமனம் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கான தொண்ணூற்று ஒரு விசேட சேவை அலுவலர்களுக்கும் நேற்று நியமனம் வழங்கப்பட்டது. இவர்களுக்கு மூன்று மாத காலத்துக்கு யாழ் செயலகத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

விசேட சேவை அலுவலர்களை வரவேற்று நேற்று யாழ். செயலகத்தில், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கோனும் கலந்து கொண்டார்.

### அமைச்சர் பேச்சு

''மக்களுக்கிடையில் பாகுபாடு, வித்தியாசம் பாராட்டாமல் சிறந்த முறையில் சேவையாற்றவேண்டும்'' என்று யாழ்.மாவட்ட அமைச்சர் திரு. யு.பி. விஜயக்கோன் விசேட சேவை அலுவலர்கள் மத்தியில் பேசுகையில் கோரிக்கை விடுத்தார்.

யாழ். மாவட்டத்தில் விசேட சேவை அலுவலர் நியமனம் சம்பந்தமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்களின் மூலம் அரசாங்கத்திற்குமிடையே இழுபறி ஏற்பட்டு, முடிவில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிபார்சில் அனுப்பப்பட்டவர்களே நியமிக்கப்பட்டார்கள்.

விசேட சேவை அலுவலர்கள் யாழ். மாவட்டத்தில் நியமிக்கப்படாததால், கிராமோதயசபைகளையும் அமைக்க முடியாமல் இருந்தது.

மாவட்ட அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், ''கிராமோதய சபையிடம் முக்கிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில்; செயலாளர்களாக கடமையாற்றும் நீங்கள், கிராமமட்டத்திலிருந்து நாடு பொருளாதாரத்

(8 பக்கம் பார்க்க)

கிரிக்கெட் போட்டி:

## இலங்கைக் கோஷ்டிக்கு ஜனதிபதி பாராட்டு

(கண்டி)

இலங்கைக்கும் இங்கிலாந்துக்குமிடையே இங்கு ஆரம்பமான மூன்று நாள் கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது நாளான நேற்று, இங்கிலாந்து நான்கு விக்கட்டுகளை இழந்து 265 ஓட்டங்களை எடுத்தது

இதற்கு முன்னர் இலங்கைக் கோஷ்டி 5விக்கட்டுகளையிழந்து மொத்தம் 273 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இலங்கைக் கோஷ்டியில் ரஞ்சன் மடுகெல்ல ஆட்டமிழக்காமல் 142 ஓட்டங்கள் எடுத்து சாதனை ஏற்படுத்தியிருந்தார் இவருடன் இணைந்து விளையாடிய பேர்ணட் பெரேரா ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இன்று மூன்றாவது கண்டி நாளாகும்.

### ஜனதிபதி பாராட்டு

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இலங்கைக் கிரிக்கெட் கோஷ்டியின் அபார விளையாட்டுக் குறித்து ஜனதிபதி பாராட்டுத் தெரிவித்திருந்தார்.

# வானில் கடத்தல் பொருள்

## ரூ. 35,000 அபராதம்; வான் பறிமுதல்; வள்ளமொன்று தப்பி ஓடியதாம்!

(யாழ்ப்பாணம்)

கடத்திச்செல்வதற்கென ஒரு வானில கொண்டுவரப்பட்ட 65 ஆயிரம் ரூபா பெறுமதியான வானொலிகள் டேப்றெக்கோடர்கள் மற்றும் இறக்குமதிசெய்யப்பட்ட துணிவகைகளையாழ் மாவட்ட உப சுங்கச்சேகரிப்பாளர் திரு செல்லையா பொன்னையா கைப்பற்றியுள்ளார்.

இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் அலுப்பாந்திக்கடல் துறைமுகத்தடியில் வைத்தே கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டு யாழ் மாவட்ட உதவி சுங்கச்சேகரிப்பாளர் திரு எஸ். எம். ஜே சேனரத்தன முன்னிலையில் பொருட்களை ஒப்படைத்தார்.

வான் சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா அபராதமும் பொருள்களின் உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்த சுங்கச்சேகரிப்பாளர் வானையும் பறிமுதல்செய்யும்படி உத்தரவிட்டார்.

மேற்படி கடத்தல் பொருள்களை ஏற்றிச்செல்லவந்த வள்ளம் தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகிறது. (மா)

## ரூபா 1,00,000 கடத்தல் சேலைகளுடன்வான்பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

வானில் கடத்திக்கொண்டு வரப்பட்ட ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் சேலைகளை யாழ். பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் யாழ். பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கிருஷ்ணதாசன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி யாழ். பண்ணைப்பாலத்தில் நேற்றுக் காலை மறைந்து நின்றபொழுது, வானொன்றில 7 மூடை வெளிநாட்டுச் சேலை வகைகள் கொண்டுவரப்பட்டதாகவும் வானைத் தடுத்து நிறுத்திய பொலிஸ் இன்ஸ்பெக்டர் சாரதியைக் கைது செய்து, யாழ். மாவட்ட உப சுங்கச்சேகரிப்பாளர் திரு. செல்

(8ம் பக்கம் பார்க்க)

## மற்றுமொரு கடத்தல் முறியடிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலுள்ள ஒருவரின் வீட்டில் 45,750 ரூபா பெறுமதியான 569 சேலை வகைகளைப் பருத்தித்துறைப் பொலிசார் கைபற்றியதுடன் வீட்டிலிருந்த ஒருவரையும் கைதுசெய்து யாழ். மாவட்ட உதவி சுங்கச்சேகரிப்பாளர் திரு எஸ் எம்.ஜே. சேனரத்ன முன்னிலையில் ஒப்படைத்தனர்.

சேலைகளைப் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்ட சுங்கச்சேகரிப்பாளர் பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்தார். (மா)

அரிய சந்தர்ப்பம்
Computer Programming பயிற்சி
மீண்டும் ஒரு புதிய வகுப்பு ஆரம்பம் 13—02—82.
அனைவரும் சேரலாம் — இன்றும் நாளையும் (வியாழன் வெள்ளி) நேரில் வரவும்.
நாஷனல் அக்கடமி,
11, மொம்சாக்கட்டிடம்,
ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம். 2248

''தமிழினத்திற்கு சேதமேற்படுமென்பதால்

## அமரர் ஜி. ஜி. தீவிரவாத வழியில் இறங்கவில்லை

நினைவு தினக் கூட்டத்தில் உரை

(யாழ்ப்பாணம்]

''தமிழினத்தைப் பாதுகாக்கவேண்டும்; தமிழ் இளைஞர்களை அநியாயமாகப் பலிகொடுக்கக்கூடாது என்பதற்காகவே அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் தீவிரவாதப் போக்கைக் கடைப்பிடிக்கவில்லை. தமிழினத்திற்கு உயிர்சேதம், பொருட்சேதம் ஏற்படும் என்பதால் தன் அமரர் ஜி ஜி தீவிரவாத வழியில் இறங்காமல் தமது வழியில் தமிழினத்தைக் கால் நூற்றுண்டுக்கு மேலாகப் பாதுகாத்துவந்தார்.''

தமிழ்க் காங்கிரஸ் தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடந்த அமரர் ஜி ஜி. பொன்னம்பலம் நினைவுதினக் கூட்டத்திற்கு தலைமைவகித்த தமிழ்க் காங்கிரஸ் உப தலைவர் சட்டத்தரணி என். ரி. சிவஞானம் மேற்கண்டவாறு

(8ம் பக்கம் பார்க்க)

திருமண அழைப்பு
மணமகன்: செல்வன் சிவச்சந்திரன்.
(பொறியியலாளர், நீர்ப்பாசன இலாகா, கொழும்பு)
மணமகள்: செல்வி தயாளினி
இடம்: மணமகள் இல்லம்.
காலம்: தை மாதம் 30—ந் திகதி (12.2.82) வெள்ளிக்கிழமை பகல் 12 36 முதல் 2.00 மணிவரை.
திருமண வைபவத்திற்கு வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்க அன்புடன் அழைக்கிறோம்
திருமதி பா. மாணிக்கம் 'மாணிக்கம்', கொக்குவில் மேற்கு,
திரு., திருமதி ச. த. தியாகராசா முருகன் வீதி, உரும்பராய் கிழக்கு.
ஃ விருந்துபசாரம்: மணமகள் இல்லத்தில் 13.2.82 பிற்பகல் நடைபெறும். (22..)

மணிவாக்கு

நான் மெதுவாக நடப்பவனாக இருக்கலாம்; ஆனால் ஒருபோதும் பின்செல்லமாட்டேன்.

—ஆபிரஹாம் லிங்கன்

# நமது நோக்கு

## கால்நூற்றாண்டு

24-ம் ஆண்டில் இன்று காலெடுத்து வைக்கும் எமது பத்திரிகை உயிருடனும், உயிர்த்துடிப்புடனும் இயங்குவதற்கு ஆண்டவன் துணையே முதற்காரணம்!

''கால் நூற்றுண்டு' என்று புணர்த்தி எழுத இலக்கணம் தெரியாதென்றல்ல: 'உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற நன்னூல் சூத்திரம் படித்த நினைவுண்டு.

ஆயினும் கடந்த வருடம் நடந்த 'கற்புப்பரிசோதனை' (Virginity Test) 'ஹீதுறு' அல்ல-வில் சித்தியெய்திய நாம், இவ்வருட முடிவிலேயே கால் நூற்றுண்டின் கதாநாயகனாக மார்புதட்ட முடியும்!

கோடீஸ்வரர்களே ஒரு தினசரிப் பத்திரிகையை நடத்தமுடியுமென்பது எவருக்கும் தெரிந்த உண்மை. அவ்வாறு நடத்தப்படும் பத்திரிகைகள் 'வியாபார நோக்கை' முதலாவதாக கொண்டவை. விளம்பரம், தனியார்துறை வர்த்தக ஸ்தாபனங்களின் ஆதரவு பெற்று நடைபெறுவன; அவற்றின் நலன்களுக்கு முரணான, எவ்வித பொது நன்மைகளையும் ஆதரிக்க முடியாத நிலையில் தொழிற்படுவன.

உரிமையிழந்த, பின்தங்கிய மக்களின் நலன் கருதி தீவிரப்பட்டால் 'முன்னுக்குப் போகிறவர் மூக்கறுபடுபவர்' என்பதைப்போல ஸ்தாபனம் ஈற்றில் மூடப்படுவது வரலாற்றின் உண்மை.

இங்கிலாந்தின் தொழிற்கட்சிப்பத்திரிகை 'டெயிலி ஹெரல்(ட்)' இவ்வித பணியில் ஈடுபட்டதன் கதி அதுவே! பின்பு இராகம் தாளம் மாற்றி 'சன்' (எங்கள் நாட்டின் 'சன்' அல்ல) என்ற பெயரில் வெளிவந்தது.

இவற்றைக் கருத்தில் கொண்டால் ஒரு தனியார் ஸ்தாபனம் குபேர சம்பத்தில்லாது அரசியல் ஆதரவு எதுவும் இல்லாது, அரசின் நெற்றிக்கண்ணுக்கு அடிபணியாது, அரசியல் வெள்ளம் வறட்சி, எல்லாவற்றையும் தாண்டி ஈற்றில் 'தீக்குளித்து', வெள்ளி விழாக் கொண்டாடத்தயாராவதென்றால், அது எல்லாம் வல்ல இறைவனருளாலும், பெரியோர் நல்லாசியாலும், பொதுமக்கள்ஆதரவினாலுமே நிறைவேறிய சாதனையெனலாம்.

உடம்பு பருக்காவிட்டாலும் உயிர் ஆற்றல் 'தேவல்ல' என்று சொல்லுமளவிற்கு, பலதுறைப்பட்ட செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், கருத்து மேடை, விளையாட்டரங்கு, வாசகர் கருத்து போன்ற இன்றைய புதினப்பத்திரிகையின் சிறப்பம்சங்களுக்கமைய 'உள்ளதுள்வள்ளீசாக', பொதுமக்களின் கைக்கெட்டக்கூடிய விலையில் பிரசுரித்தலையே எமது நிரந்தரமான நோக்காகக் கொண்டு செயற்படுகின்றோம்.

இவ்வருடத்தில் நாம் 'சண்டைக்கஞ்சோம்' என்று பேரம் பேசக்கூடிய அளவில் எமக்கொரு தம்பி ஆங்கில வார இதழாக சனிக்கிழமை தோறும் வெளிவரும் ''Saturday Review'' பேராதரவு அளிக்கின்றது.

எந்த நிலையத்தில் எமது பத்திரிகைஆரம்பமானதோ அங்கு அது இன்று திரும்பி வந்ததை வாசகர்கள் குதூகலத்துடன் வரவேற்பார்களென்பதையும் கூறி அவர்களின் குன்றாத நம்பிக்கையையும் பேராதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

## டெஸ்ற் கிரிக்கெட்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் பெற்ற தமிழ்நாடு' என்ற பாரதியாரின் கருத்தை அகில உலகுமே ஏற்றுக்கொண்டது.

அதேபோல் ஷேக்ஸ்பியர், கிரிக்கெட், தேநீர் என்ற முக்கொடைகளையும் உலகுக்களித்தது ஆங்கில நாடு.

'வெள்ளையா வெளியேறு' என்ற மகாத்மாகாந்தியின் பிரேரணை இன்று இந்தியாவில் மட்டுமல்ல இலங்கை போன்ற பல நாடுகளிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆயினும் அவர்களின் ஆங்கிலம், கிரிக்கெட், தேநீர் இம்மூன்றும் சாதாரண மக்கள் ஆசைப்படும் இனிய பொருட்கள்

ஆங்கிலேயரின் கிரிக்கெட் விளையாட்டை அவர்களிலும் மிக்க திறமையாக விளையாடியவர்கள் இந்திய வீரர்கள்! இலங்கை அதற்கு அவ்வளவு தூரம் பின்னிற்கவில்லை.

இன்று இலங்கை வீரர்கள் டெஸ்ற் கிரிக்கெட் விளையாடும் உயர் அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றனர். அதனை விளையாட ஆங்கில கிரிக்கெட் கோஷ்டி இங்கு வந்துள்ளனர்.

இதற்கு முன்னோடியாக முந்தநாள் தொடங்கிய போட்டி கண்டி அஸ்கிரிய சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் ஆரம்பித்தது. முதல் நாளிலேயே இலங்கை நன்றாக விளையாடியதும், ரஞ்சன் மடுகல்லை என்ற இலங்கை வீரர் ஆட்டம் இழக்காது 115 ஓட்டங்கள் பெற்றதும் எடுத்த எடுப்பில் இலங்கைக்கு உற்சாகமளிக்கிறது.

பல்லாயிரக்கணக்கானோர் நேரிற் கண்டதும் தொலைக்காட்சியில் கண்டுகளித்ததும் இந்த விளையாட்டு சாதாரண மக்களின் உள்ளங்களைக் கவர்ந்திருப்பதை வெளிப்படுத்துகிறது.

'ரூபவாகினி' இந்த ஆட்டங்களை நாடு முழுவதிலும் காட்டுவதற்குத் தயாராகின்றது. லட்சக்கணக்கான மக்கள் இவற்றைச் சுவைக்கத்துடிக்கின்றனர்.

நலல காரியம் நன்றாய் நடைபெறுவதைநாம்கண்டிப்பதுமுறையல்ல வெள்ளைக்காரனின் விளையாட்டென்று வசைபேசும் காலம் கடந்துவிட்டது. இவற்றை 'ரீவி' யில் கண்டுகளிக்கும் மாணவர்களை ஆசனங்களிலிருந்து பெயர்த்தெடுப்பதே ஒரு பிரச்னை!

# 'ஈழநாடு' பற்றிய சில பழைய நினைவுகள்

நேற்றுப்போல் இருக்கின்றது.

''ஈழநாடு'' வாரமலராக ஆரம்பித்து வாரம் இருமுறை என வெளிவந்துகொண்டிருந்தவேளை.

மலையகத் தலைவர் திரு. கே. ராஜலிங்கம் தம்மை வந்து சந்திக்கும்படி தகவல் அனுப்பியிருந்தார்.

மலை நாட்டிலிருந்து கொழும்பு வந்து திரு. ராஜலிங்கத்தை அவரது காரியாலயத்தில் போய்ப்பார்த்தேன். உடனேயே நியுபுல்லர்ஸ் வீதியில் உள்ள திரு. கே. ஸி. தங்கராஜா வீட்டுக்கு அழைத்துச் சென்றார் அவர்.

அங்கு வீட்டின் வராந்தாவில் திரு. தங்கராஜாவும் திரு. வெள்ளையனோடு மற்றும் பலரும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு என்னை அறிமுகப்படுத்திவிட்டு வீட்டுக்குள் அழைத்துச் சென்றார் திரு. ராஜலிங்கம். உள்ளே திரு. கே. பி. ஹரனும் வேறு சிலரும் அமர்ந்து எதையோ ஆராய்ந்துகொண்டிருந்தார்கள்.

என்னைக் கண்டதும் ''வாங்க, வாங்க'' என்று வரவேற்றார் திரு. ஹரன். அதற்கும்மேல் மாமூல் விஷயங்களைப் பேசிக்கொள்ளட்டும் என்றவகையில் திரு. ராஜலிங்கம் முன்வாசலுக்கு வாபசாகிவிட்டார்.

திரு. ஹரன் ''யாழ்ப்பாணத்திலே ஒரு தமிழ்ப் பத்திரிகை இருக்கு—அதைத் தினசரியாக்கப்போருங்க, நான் அதிலே சேர்ந்துட்டேன்; நீங்களும் வாறீங்களா!'' என்று கேட்டார்

என்போன்று 'வீரகேசரி'யிலிருந்து விலகிய வேறு சிலரும் தம்மோடு யாழ்ப்பாணம் வர விருப்பதுபற்றியும் தெரிவித்தார் திரு. ஹரன்.

''பேப்பர் வேலைக்கு எனக்கும் விருப்பம்தான்— நானும் வந்துடறேன்'' என்று பதில் சொன்னேன்.

இது நடந்தது 1961ம் ஆண்டு, ஜனவரி மாதத்தில் ஒரு நாள்.

அதற்கு முன்னரே 'ஈழநாடு' 1959ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு வெளிவந்துகொண்டிருந்தது.

நான் யாழ்ப்பாணம் வருவதற்குத் தயாரானேன்.

திரு. ராஜலிங்கம் சொன்னார், ''யாழ்ப்பாணம் உனக்குப் புதிய இடம்தான். ஆனால் உன்போன்ற இளைஞர்களுக்கு வாழ்க்கையில் துணிச்சலான அனுபவங்கள் தேவை, போய்வா'' என்று.

சிறிதுகாலத்தில் நான் மீண்டும் மலையகம் திரும்ப நேர்ந்தபோதிலும் யாழ்ப்பாணம் என்னை நன்றாகவே பற்

-- 'பேனா' --

றிக்கொண்டுவிட்டது. 1966ல் திரும்பவும் நான் யாழ்ப்பாணம் வந்து மீண்டும் 'ஈழநாடு' காரியாலயத்தில் சேர்ந்தபொழுது பத்திரிகையின் பணி பலமடங்கு விரிந்திருப்பதையும் திரு. ஹரனோடு—அமரர் தம்பர், மற்றும் முருகேசர் போன்ற பெருமக்கள் இணைந்து செயல்படுவதையும் கண்டேன்.

''ஈழநாடு'' தனது 24 வயதை எட்டியுள்ள இந்த வேளையில் அதன் ஆரம்பகால நிலைமையும்—அதன் வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த பெருமக்களும் நினைவுக்கு வருவது இயற்கைதான்.

அவர்களில் முக்கியமான இருவர் இன்று நம்மத்தியில் இல்லை. டாக்டர் கே. சி. சண்முகரத்தினம், ஆசிரியர் கே. பி. ஹரன் ஆகிய இருவருமே அவர்ககள்.

சத்தியாக்கிரகம் இங்கு உச்சக்கட்டத்தில் இருந்த வேளையில் 'ஈழநாடு' இளமை முறுக்கோடு தனித்துவமான இடத்தை வகித்துக்கொண்டு செய்திகளை வழங்கியதை அன்றைய வாசகர்கள் இன்றும் மறந்திருக்கமாட்டார்கள். 1964 சூறாவளிக்கொடுமையின்போது 'ஈழநாடு' தனக்கே உரிய முறையில் களத்தில் இறங்கி துயர்துடைக்கும்பணியில் ஈடுபட்டது. நிதிகள் சேர்த்தும் உடுபுடவைகள் சேர்த்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரில் சென்று வழங்கினார்கள்.

செய்திகளை வழங்குவது மட்டும்தான் ஒரு பத்திரிகையின் பணியென்றில்லாமல் துன்பமுறும் மக்களுக்கு வேறு வழிகளிலும் பொறுப்புடன் பணியாற்ற முடியும் என்பதை இது எடுத்துக் காட்டியது.

தமிழரின் கலைகள்—கலாச்சாரங்கள். கொள்கைகள்—கோட்பாடுகள் —குறைகள் —கோரிக்கைகள் யாவற்றையும் வெளிப்படுத்தும் களமாக 'ஈழநாடு' அமைந்து செயல்பட்டு வருகின்றது.

வடக்கு; கிழக்கில் மாத்திரமின்றி மலையகம், புத்தளம்; கொழும்பு என்று பரந்து வாழும் தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் அரசியல் கருத்துக்களையும் அவ்வப்போது ஆணித்தரமாக வெளியிட்டு பொதுக்கருத்தினை உருவாக்குவதில் 'ஈழநாடு' பெரும்பணி

(7ம் பக்கம் பார்க்க)

## வாழிய ஆயிரம் ஆண்டுகள்

ஈழத்தமிழர் தம் நெஞ்சில் நிறைந்திடும்
எம் தமிழ் நாயகியே
வாழும் தமிழர் கலை கலாச்சாரம்
வளர்த்திடும் தூயவளே
நாளும் புதிய புதினங்கள் தந்திடும்
நன்மகள் போன்றவளே
வாழிய பல்லாண்டு நீதி தழைத்திட
வையக மீதினிலே

தீயன கொன்றிடும் உந்தனைத் தீயவர்
தீர்க்க முயன்றிடினும்
நேயமாய் இருபத்து நாலாண்டை எய்தியே
நீதி வழி நடக்கும்
தூயவளே எங்கள் துன்பங்கள் போக்கிடத்
தொண்டு புரிபவளே
ஆயவை யாவும் எமக்கீந்து வாழிய
ஆயிரம் ஆண்டுகளே.

காரை செ. சுந்தரம்பிள்ளை

## வாழ்க! வாழ்கவே!!

தீயினி லிட்டபோதும் தண்ணொளி பரப்பிநின்ற
ஏட்டினை யொத்தாய் வாழ்க!
தீயினுட் புகுந்துவந்து தூய்மையை உணர்த்திநின்ற
ஜானகி போன்றாய் வாழ்க!!
தீயினிற் சுட்டபோழ்தும் தன்னொளி பரப்பிநிற்கும்
பொன்னினைப் போல்வாய் வாழ்க!
தீயினி லிட்டாலும்தான் வெண்நிறம் குன்று
தொளிரும்
சங்கினை யொப்பாய் வாழ்க!!
தீயினி லிட்டபோதும் இன்சுவை யதையே நல்கும்
பால்தனைப் போன்றோய் வாழ்க!
தீயவர் சுட்டபோதும் தமிழ்ப்பணி தொடர்ந்
தியற்றும்
எங்களினேடேயீழ நாடுநீ வாழ்க! வாழ்க!!

--முருகு

## பாராட்டுப் பெற்ற கவிஞர்

யாழ் மாநகர மன்றக் கீதத்தை ஆக்கி முதற்பரிசை பெற்ற கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை நேற்று யாழ். மாநகரசபையால் பாராட்டப்பட்டார்.

ஈழத்து சிறந்த கவிஞர்களுள் ஒருவரான இவர் 'ஈழநாடு' நடத்திய அகில இலங்கை ரீதியிலான காவியப்போட்டியில் தனது 'சங்கிலியம்' என்னும் காவியத்துக்கு முதற்பரிசைப் பெற்றவர். மிக இளம் வயதிலேயே இரண்டு தடவைகள் சாகித்திய மண்டலப் பரிசை 'தேனாறு' 'சங்கிலியம்' ஆகிய நூல்களுக்கு பெற்றவர். 'சங்கிலியம்' 'ஈழநாடு' வெளியீடு என்பது குறிப்பிடத்தக்கது. இந் நூல் லண்டனில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் இடம் பெற்றது.

பல ஆண்டுகள் யாழ். இலக்கிய வட்டச் செயலாளராக விருந்து, பல நூல்களை வெளியிட்டவர். விழாக்களை நடாத்தியவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் இசை, நாடகம், விமர்சனம் ஆகிய துறைகளிலும் ஆழமான பாண்டித்தியமுடைய இவர், தமது பட்டப்பின்படிப்புக்குச் சமர்ப்பித்த ஈழத்து இசை நாடக வரலாறு என்னும் ஆராய்ச்சிக் கட்டுரை பலரின் பாராட்டுதலைப் பெற்றது. கல்வித்துறையில்பட்டங்கள் பெற்றவா. காரைநகரை பிறப்பிடமாக கொண்ட இவர் லண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரியும், இலங்கைப்பல்கலைக்கழக கல்வித்துறைப் பட்டங்களும் பெற்றவர். காரைநகர் இந்துக் கல்லூரி அதிபராக இருந்தவர். தற்பொழுது பலாலி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

# அரபு அணிக்கு எகிப்து மீண்டும் திரும்புமா?

## கெய்ரோ ஏடு தகவல்

பேரூட், ஜன.10

''ஜனாதிபதிஅன்வர் சாதாத் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் அரசியல், மத எதிர் கட்சியினர் சம்பந்தமாக எடுத்த நடவடிக்கைகள் சட்ட பூர்வமானதா என்பதை நிர் வாக நீதிமன்றம் விசாரணை செய்யும்''என்று கெய்ரோ பத்திரிகையான அஜ்—அஹ் ராம் செய்தி வெளியிட்டுள் ளது. இப்பத்திரிகை அரசின் கட்டுப்பாட்டிலுள்ளது.

எகிப்தில் மாற்றங்கள் ஏற் படலாமென்பதற்கு இது அத் தாட்சியாக இருக்கலாமா என்று அரபு அரசியல் வட் டாரங்களில் ஹேஷ்யம் கூறப் படுகிறது,

''பழைய கதையை நாம் மறந்துவிட விரும்புகிறோம்'' என்று எழுதும் இப்பத்திரிகை ''சதாத்தின் மேற்கத்தியச் சார்பு கொள்கையை அரசு திருத்தியமைக்க விரும்புவ தையே இது காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருது கின்றனர். எகிப்தின் ஆலோ சனைக் கவுன்சிலிலும் இவ் விஷயம் விவாதிக்கப்பட்டுள் ளது; சமுகவாழ்வில் ஜன நாயக மாற்றங்கள் புகுத்தப் படும் என்ற வாக்குறுதியுடன், நாட்டின் பிரனைகளுக்கு பரி காரம் காண எதிர்க்கட்சிக ளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு ஆவல் தெரிவித் துள்ளது. செப்டம்பரில் கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சி பிரமுகர்கள் ஏற்கனவே விடு தலை செய்யப்பட்டுள்ளனர். இப்பின்னணியில், ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் ஊழலைக் களையவும் பொருளாதார அமைப்பின் பொதுத் துறையை பலப்படுத்தப் போவதாகவும் அறிவித்துள் ளார். சுருக்கமாகக் கூறுவதா ஞல் எகிப்து நிலைமை சிக்க லாக உள்ளது. சாதாத் படு கொலையைத் தொடர்ந்து பிர கடனம் செய்யப்பட்ட அவசர கால நிலைமை நீடிக்கிறது'' என்று கூறுகிறது.

# பஸ்நிலையம் இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா பஸ்நிலையம் தற் காலிக இடமாற்றத்தைத் தொடர்ந்து, குடியிருப்பு பிள் ளையார் கோவிலுக்கு அருகா மையில் வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது பஸ் நிலையமும் இவ்விடத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

# தி. மு. க. வெளிநடப்பு

சென்னை, பெப். 10

தமிழக மேலவையில் நேற்று ஆளுநர் உரை மீதான விவா தம் நடைபெற்றுக்கொண்டி ருந்த போது தி. மு. க. உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

## மல்லாகம் சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பழம்பதி ஸ்ரீ முருகமூர்த்தி கோவிலில் இன்று பகல் 1008 சங்காபிஷேகமும், இரவு திருக்கல்யாண மும் நடைபெறும். (மா)

நிறுவை, அளவில்

# மோசடிகளைத் தவிர்க்க. . .

(மாவிட்டபுரம்)

வலி. வடக்கு உதவி அர சாங்க அதிபர் பிரிவில் நிறு வைகள், அளவைகள் கருவிக ளுக்கு முத்திரையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன.

சரியான அளவுகளைக் கொண்டிராத நிறுவைகள், அளவைகள் கருவிகளைப் பயன் படுத்தி மோசடிகள் செய்யப் படுவதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி வடக்கு உதவிஅரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து இந்த முத்திரையிடும் வேலைகள் மேற்கொள்ளப் படும் வலிவடக்கு உதவி அர சாங்க அதிபர் பிரிவிலுள்ள வர்த்தகர்கள் யாவரும் தமது கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ள வேண்டுமெனவும். முத்திரையிடப்படாத கருவி கள் பறிமுதல் செய்யப்படு மெனவும் அறிவிக்கப்பட்டுள் ளது.

முத்திரையிடுவது தொடர் பான ஏற்பாடுகளை மேற் கொள்ளுமாறு கிராமசேவை யாளர்கள், பாவனையாளர் சங் கங்களின் பிரதிநிதிகள் ஆகி யோரை உதவி உள்நாட்டு வியாபார ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு கோரியுள் ளார்.

# பூச்சித் தாக்கத்திலிருந்து மாம்பழங்களைக் காப்பாற்ற...

## றேட்டரி சேவையை நாடுங்கள்

(யாழ்ப்பாணம்)

மாமரங்களின் பூக்களைப் பூச்சிகளின் தாக்கத்திலிருந்து காப்பாற்றுவதற்கு யாழ். றேட்டரிக்கழகம் முன்வந்துள் ளது.

வடபகுதியில் மாமரங்கள் பூக்கும் இக்காலத்தில் பூச்சிக ளின் தாக்கம் ஆரம்பித்துள் ளது. இப் பூச்சிகளிலிருந்து மாம்பூக்களை காப்பாற்ற மாம ரங்களுக்கு மருநதடிக்கும் நட வடிக்கையை யாழ். றேட்ட ரிக்கழகம் மேற்கொண்டுள் ளது.

இதுபற்றிய விபரங்களை அறிய விரும்புவோர் 'றேட் டரியன்' டாக்டர் சேர். சண் முகலிங்கத்துடன் தொலைபேசி 594, 7175 ஆகிய இலக்கங்க ளில் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(க—அ)

# குரும்பசிட்டி கொள்ளை: சந்தேகநபர் விடுதலை

[மாவிட்டபுரம்)

குரும்பசிட்டி கொள்ளைச் சம்பவம் குறித்து நடந்த அடையாளம் அடையாள அணிவகுப்பில் காணப்படாத சந்தேக நபரை மல்லாகம் நீதி பதி விடுதலை செய்தார்.

குரும்பசிட்டியில் வி. சொர் ணலிங்கம் என்பவரது வீட்டி லிருந்து 16 ஆயிரத்து 250 ரூபா பெறுமதியான நகை, பொருட்கள் கொள்ளையடிக் கப்பட்டது தொடர்பாக சந் தேக நபர்களான சின்னத் துரை வடிவேலு, குருசாமி அசோக்குமார் ஆகியோர் மல் லாகம் நீதிமன்றத்தில் ஏற்க னவே அடையாள அணிவகுப் புக்குட்படுத்தப்பட்டபோது முதலாவது நபர் மட்டும் அடையாளம் காணப்பட் டார். மற்ற சந்தேகநபர் அடையாளம் காணப்பட வில்லை.

இருவரும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டு மீண்டும் மல்லாகம் நீதிமன் றத்தில் ஆஜர் செய்யப்பட்ட னர்.

அடையாளம் காணப்படாத இரண்டாவது சந்தேகநபரை விடுதலை செய்யுமாறு அவரது சார்பில் ஆஜரான சட்டத் தரணிகே. விஜயேந்திராகோரி ஞர்.

பொலிசாரும் இதற்கு ஆட் சேபம் தெரிவிக்காததைய டுத்து நீதிபதி திரு. க. வி. விக் கினேஸ்வரன் அவரை விடு தலை செய்தார். முதலாவது சந்தேகநபர் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டார்,

# மருந்துத் தட்டுப்பாடு நீங்குகிறது

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளு க்கு இவ்வருட முதலாம் கந்தா யத்திற்கான மருந்துவகைகளை யாழ் சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் அலுவல கத்தினர் நேரடியாக கொண்டு சென்று விநியோகம் செய்து வருகின்றனர்.

மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, அளவெட்டி ஆகிய இடங்களிலுள்ள அரசி னர் வைத்தியசாலைகளுக்கு இம்மாதம் 19ம் திகதி மருந்து கள் நேரடியாக விநியோகிக்கப் படும் என்று, இது தொடர் பாக வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் இது வரைகாலமும் நிலவிவந்த மருந்துத் தட்டுப்பாடு இதன் மூலம் நீங்கிவிடும் என்று கரு தப்படுகின்றது.

# "1-வது சந்தேக நபரிடம் துவக்கை கைப்பற்றினேன்"

[சாவகச்சேரி)

''முதலாவது சந்தேக நபரி டமிருந்து ஒற்றைக்குழல் துவக்கும், அத்துடன் ஒரு தோட்டாவும் வெவ்வேறு வித மான 10 தோட்டாக்களும் கைப்பற்றினேன்''.

பளை வண்ணங்கேணி துப் பாக்கி வைத்திருந்த வழக்கில் சாட்சியமளித்த சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி திரு. அசோகா தென்னக் கோன் மேற்கண்டவாறு கூறி ஞர்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதி பதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணை செய் றப்பட்டது.

இவ்வழக்கில் பளை வண் ணங்கேணியைச் சேர்ந்த ஞா. வில்பிறட். இரத்தினசிங்கம் சி. சிவநேசன் ஆகிய இருவ ரும் சட்டவிரோதமாக லைசென்ஸ் இல்லாத துவக்கு வைத்திருந்தார்கள் எனக் குற் றஞ் சாட்டப்பட்டிருப்பது.

பொலிஸ் பொறுப்பதிகாரி தொடர்ந்து கூறியதாவது:

''சான்றுப் பொருட்களை அடையாளங்களோடு சமர்ப் பித்து அவற்றை அரசாங்க இரசாயன பரிசோதனைக்கு அனுப்பி ஒற்றைக்குழல்தானு என்று அறிக்கை சமர்ப்பிக்கும் படி கோருகின்றேன்''

2ம் சந்தேக நபர் ஓர் அர சாங்க ஊழியர் அவருக்குக் கருணைகாட்ட வேண்டுமென அவரது சட்டத்தரணி திரு.சீ. பாலகிருஷ்ணர் கோரியதை தொடர்ந்து அவரைச் சாவச் சேரிப் பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு மாதக்கடைசி ஞாயிற்றுக்கிழமையும் கையொப் பம் இடவேண்டுமென உத்தரவிட்ட நீதிபதி 1ம் எதிரியை மார்ச் 10 திகதி வரைவிளக்கமறியலில் வைக் கும்படி உத்தரவிட்ட. (க)

# அடுத்துவரும் தேர்தலில் அங்கத்தவர் விபரம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர் தல்களில் ஒவ்வொரு மாவட் டத்திலிருந்தும் தெரிவு செய் யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, தேர்தல்களில் போட்டியிடும் அங்கீகரிக்கப் பட்ட கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும், ஒவ்வொரு மாவ ட்டத்திற்கான நியமனப் பத்திரங்களில் குறிப்பிட வேண்டிய வேட்பா ளர்களின் எண்ணிக்கை ஆகி யவை குறித்து தேர்தல் ஆணை யாளர் திரு. எம். ஏ. பியசே கரா வர்த்தமானிமூலம் அறி வித்துள்ளார்.

அடுத்துவரும் பாராளுமன் றத் தேர்தல்கள் முதற்தடவை யாக விகிதாசார பிரதிநிதித் துவ முறையில் நடத்தப்பட விருக்கின்றன. மாவட்ட மட் டத்திலேயே எம். பிக்கள் தெரிவு நடைபெறும். 22தேர் தல் மாவட்டங்களில் தேர்தல் நடத்தப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் போட்டியிடும் அங்கீகரிக்கப் பட்ட கட்சிகளும், சுயேச்சை குழுக்களும் தங்கள் வேட்பா ளர் பட்டியலில், அந்த மாவட் டத்தின் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக் கையைவிட, மூன்றிலொரு பங்கு அதிகமான வேட்பாளர் களை குறிப்பிட வேண்டும்.

வர்த்தமானியில் வெளியி டப்பட்டுள்ள விபரம் வரு மாறு:—

| தேர்தல் மாவட்டம் | தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் எண்ணிக்கை | நியமனத்தில் இடம்பெற வேண்டிய வேட்பாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 21 | 28 |
| கம்பஹா | 17 | 23 |
| களுத்துறை | 11 | 15 |
| கண்டி | 12 | 16 |
| மாத்தளை | 5 | 7 |
| நுவரெலியா | 6 | 8 |
| காலி | 11 | 15 |
| மாத்தறை | 9 | 12 |
| அம்பாந்தோட்டை | 7 | 10 |
| யாழ்ப்பாணம் | 11 | 15 |
| வன்னி | 5 | 7 |
| மட்டக்களப்பு | 4 | 6 |
| திகாமடுல்ல | 6 | 8 |
| திருகோணமலை | 4 | 6 |
| குருநாகல் | 16 | 22 |
| புத்தளம் | 7 | 10 |
| அனுராதபுரம் | 7 | 10 |
| பொலன்னறுவை | 4 | 6 |
| பதுளை | 8 | 11 |
| மொனறுகலை | 5 | 7 |
| இரத்தினபுரி | 10 | 14 |
| கேகாலை | 10 | 14 |

(வெ)

இந்திய விமான விபத்து:

# ராணுவத்தினரின் சடலங்களை பொலிசார் மீட்டனர்

புதுடில்லி, ஜன.10

விமான விபத்தில் பலியான ராணுவத்தினரின் சடலங்களை பொலிசார்உறைபனியிலிருந்து மீட்டனர்.

வடஇந்தியாவின் ஜம்முப் பிரதேசத்தின் மீது பறந்து சென்றபோது விபத்துக்குள் ளான இந்திய 'எயர் லைன்ஸ்' விமானத்தில் பயணம் செய்த விமானச் சிப்பந்திகளும் ராணு வத்தினரும் மரணமானதை யடுத்து இறந்தவர்களின் சட லங்களை மீட்கவென விரைந்த இந்தியப் பொலிசார் சுமார் ஒரு அடி உயரமாள உறைபனி யிலிருந்து மிக்க சிரமத்துடன் சடலங்களை மீட்டனர்.

காலநிலைச் சீர்கேடு காரண மாக விபத்துக்குள்ளான இதே விமானத்தில் பயணம் செய்த வர்களில் பெரும்பாலானவர் கள் ராணுவத்தினராவர்

(இ)

# பிரமுகர்களுக்கான இ. போ. சபையின் பிரயாண சலுகை ரத்தாகிறது

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபை இதுவரைகாலமும்,பிரதி யமைச்சர்கள், அமைச்சுக் காரியதரிசிகள், எம். பிக்கள் பொதுசனத் தொடர்பு அதி காரிகள் ஆகியோருக்கு வழங்கி வந்த இலவச பயண அனு மதிச் சீட்டுக்களை ரத்துச் செய்யவிருப்பதாக அறிவித் துள்ளது.

இ.போ.ச. வுக்கு ஒருகோடி ரூபாவுக்கு மேல் கணிசமான நஷ்டம்ஏற்பட்டுள்ளதாலேயே மேற்படி நடவடிக்கை எடுக் கப்பட்டிருப்பதாகத் தெரிவிக் கப்பட்டது,

இலவச பயண அனுமதிச் சீட்டைவைத்திருப்போருக்கு இலங்கையின் எப்பாகத்திற் கும் கட்டணமின்றிப்பயணஞ் செய்யுப்சலுகைஇதுவரைகால மும் வழங்கப்பட்டிருந்ததென் றும்,இனிமேல் இத்தகையசலு கையை அனுபவிக்கவிரும்பு வோர் வருடமொன்றுக்கு 2,640ரூபாவை போக்குவரத்து சபைக்குச் செலுத்தவேண்டு மென்றும், இதற்கான கால எல்லைமார்ச் மாதம் இறுதி வரை விதிக்கப்பட்டுள்ளதென் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் தனது அமைச்சுச்சார்ந்த சகல உயர் அதிகாரிகளுக்கும், தகுதி வாய்ந்த அதிகாரிகளுக்கும். வீண் விரயங்களையும் நட்டங் களையும் தவிர்க்கும்வகையில் செயற்படுமாறு பணித்துள் ளார். (கி)

# வெற்றி!

## உயர்தர கல்வியில் வெற்றியீட்டுங்கள்
## A/L பரீட்சை வினாவிடை வகுப்புகள்

### பிரசித்திபெற்ற ஆசிரியர்கள்

திரு. ரவிமோகன் PURE AND APPLIEDMATHS

திரு. தவபாலச்சந்திரன் PHYSICS

திரு. சிவகுமார் CHEMISTRY

திரு. குகாதரன் BOTANY

ZOOLOGY ஆசிரியர் விரைவில் அறிமுகப்படுத்தப்படுவார்

அத்துடன்

6, 7, 8, 9 சக O/L வகுப்புகள் பிரசித்திபெற்ற
ஆசிரியர்களால் கொண்டு நடத்தப்படும்.

# குரோபின் அக்கடெமி
## GROFIN ACADEMY

ஆலடிச் சந்தி, ::-:: மானிப்பாய்.

**(Member of Grofin Trades)**

2239

# தொழிற்பயிற்சிபெறுமல் வெளிநாடுசெல்லும் இளைஞர்கள் சிரமப்படுகின்றனர்''

(பண்டத்தரிப்பு)

''வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு தொழிற்பயிற்சியே 'முக்கிய தகைமையாக இன்று தேவைப் படுகின்றது. தொழிற்பயிற்சி களை சரியான முறையில் பெறுத பல இளைஞர்கள் இன்று வெளிநாடுகளுக்கு சென்று பெரிதும் சிரமமபடு கின்றனர். வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நோர்வே நாட்டுத்தொண்டையம் லயன்ஸ்கழகத்தின் அனுசரணை யுடன் நடாத்திவரும் தொழிற் பயிற்சி நிலையம் இப்பகுதி இளைஞர்களுக்கு பெரும் வரப் பிரசாதமாகும்''

இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஏ. கதிர்காமர் வட்டு தொண்டையம்'' தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவ மாணவி களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதி யாக கலந்துகொண்டு பேசு கையில் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் சட்டத்தரணி கே.குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பயிற்சிகளைமுடித்துக்கொண்ட சுமார் 150 பேருக்கு சான்றி தழ்களை திருமதி க. கதிர்காமர் வழங்கினர். தொழிற் பயிற்சி நிலைய பொறுப்'ாளர் பேரா சிரியர் பாலன் செல்லையா, சுழிபுரம்விக்ரோறியக் கல்லூரி அதிபர் திரு. க. அருணுசலம், லயன்ஸ் கழகங்களின் தொழிற் பயிற்சிக்கு பொறுப்பான உத்தி யோகத்தர் திரு. சி. சுப்பிர மணியம் ஆகியோரும் இவ் வைபவத்தில் உரையாற்றினுர் கள் கழகச் செயலாளர் டாக்டர் ரி. பகீரதன் நன்றி யுரை நிகழ்த்தினுர்.

# யாழ்ப்பாணக் கல்லூரியில் மாபெரும் கண்காட்சி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன் இணைந்து கைத்தொழில், விவ சாய, தொழில்நுட்பக் கண் காட்சியொன்றை மார்ச் மாதம் 16ம் திகதி தொடக்கம் 20ம் திகதிவரை நடாத்தவுள் ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியில் நடை பெறவிருக்கும் இந்தக் கண் காட்சியில் கம்பியூட்டர் இயங் கும்முறை, டெலிவிஷன் விளை யாட்டு ஒளிபரப்பு போன்ற பல தொழில்நுட்பக் காட்சிச் சாலைகளும், சிறு கைத்தொ ழில் காட்சிச்சாலைகளும் பனம் பொருள் உற்பத்திபற்றிய செய்முறைப் பயிற்சிக் காட் சிச்சாலைகளும் மற்றும் வர்த் தக, கலை, கலாசாரக் கண் காட்சிகளும் இடம்பெறவுள் ளன. பாடசாலைகளின் சித்திர ஓவியக் காட்சிகளும் இக்கண் காட்சியில் இடம்பெறவுள் ளன.

1980ம் ஆண்டு மார்ச் மாதத் திலும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் யாழ்ப்பாணக் கல்லூரியில் இதுபோன்ற கண் காட்சியொன்றை சிறப்பான முறையில் நடத்தியது குறிப் பிடத்தக்கது.

இக்கண்காட்சியை மேலும் சிறப்பாள முறையில் நடாத்து வதற்கான ஒழுங்குகளை வட்டு லயன்ஸ்கழகத் தலைவர் சட் டத்தரணி கே. குணரத்தி னம், கழகச் செயலாளர் டாக்டர் ரி. பகீரதன் ஆகி யோர் மேற்கொண்டு வருகின் றனர்.

### தமிழ்மலர் விநியோகம்

(மட்டுவில்)

கல்வி அமைச்சு இந்தஆண்டு தனது இலவச பாடப்புத்தக விநியோகத்தின்போது தமிழ் மொழி 6ம் வகுப்புக்கான 'தமிழ் மலர்' பாடநூலையும் அனுப்பிவைத்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகாலமாக, 'தமிழ் மலர்' பாட நூல் 6ம் வகுப்பு மாணவருக்கு விநி யோகப்படாமலிருந்தது. (க)

சேவையிலிருந்து

# கடற்படைவீரர்கள் பெருமளவில்விலகுகின்றனர்

(கொழும்பு)

இலங்கை கடற்படையைச் சேர்ந்த வீரர்களும் உயர் அதி காரிகளும் பெருமளவில் சேவையிலிருந்தும் விலகிச்செல் வதாக- அறியப்படுகின்றது.

தற்போது 700 வெற்றிடங் கள் இச்சேவையில் காணப் படுவதாகவும் இத் தொகை கடந்த சிலவருட காலத்தினுள் ஏற்பட்ட பெரும் வெற்றிடம் என்றும் விபரிக்கப்பட்டுள் ளது:

கடற்படைசேவையில்பூரண திருப்தியடைய முடியாதிருப் பதனுலும், தனியார் துறை நிறுவனங்களில் அதிக வசதிக ளுடன் கூடிய வேலைவாய்ப் புக்கள் கிடைப்பதனுலுமே அதிகளவில் வேளியேற்றம் காணப்படுவதாகத் தெரிய வருகிள்றது. (கி)

### பிரிவுபசாரம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் 11 வருடம் பணியாற்றி இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். இராச துரைக்குப் பிரிவுபசார மொன்று அளிக்கப்பட்டது.

வித்தியாலயத்தில் அதிபர் திரு. எஸ். பேரம்பலம் தலை மையில் நடந்த இப்பிரிவுபசார வைபவத்தில் உபஅதிபர் திரு த. வல்லிபுரம் மற்றும் பலர் உரையாற்றினர். ]க)

### காவலூர்பாடசாலை அபிவிருத்தி எம். பி. தலைமையில் கூட்டம்

(வேலணை)

ஊர்காவற்றுறைத் தொகுதி யில் உள்ள சகலபாடசாலை களின் அபிவிருத்திகள்தொடர் பாக ஆராயும்பொருட்டு இம் மாதம் 16ம் திகதி செவ்வாய்க் கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத் தினம் தலைமையில் கூட்ட மொன்று நடைபெறவிருக் கின்றது.

இக்கூட்டத்தில் புங்குடுதீவு கல்விவட்டார அதிகாரி திரு. கே. குகதாசன், வேலணை கல்வி வட்டார அதிகாரி திரு. பொன் கணேசன், உட்பட ஊர்கா வற்றுறைத் தொகுதியில் உள்ள சகல பாடசாலை அதிபர்களும் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளார்கள்.

# பழைய இராசகுளம் திருத்த வேலை: ரூபா 26 லட்சம் ஒதுக்கீடு

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் உள்ள பழைய இராசகுளம் என்று சந்தேகிக்கப்படும்கோம் பகஸ்வவ என்ற குளத்தினை திருத்தியமைக்க அரசு 26லட் சம் ரூபா செலவிடவுள்ளது.

இக்குளத்திற்கு தற்போது பதினேழரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குளம் கட்டி முடிந்ததும் 200 ஏக்கர் காணி நீர்பாசனம் பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அரசாங் அதிபர் திரு. கே. ஸி, லோகேஸ்வரன் மேலதிக அரசாங்கஅதிபர்திரு சிறிசேனு நீர்பாசன பொறியியலாளர் திரு. அழகரட்ணம் ஆகியோர் உட்பட பல அரசாங்க உயர் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

# உதைபந்தாட்டக்குழு மட்டுநகர் திரும்பியது

(மட்டக்களப்பு)

உதைபந்தாட்டப் போட்டி யில் கலந்து கொள்வதற்காக யாழ் விஜயம் செய்த மட்டக் களப்பு கோஷ்டி யாழ். கோஷ்டியுடன் மோதாம லேயே மட்டக்களப்பு திரும்பி னர்.

யாழ். கோஷ்டியுடன் மோத இருந்த மட்டக்களப்பு கோஷ் டியினர் 17பேரும் ஆட்டம் நடைபெற இருந்த தினத் தன்று யாழ்ப்பாணத்தில் பகற் போசனம் அருந்திய பின் மயக்கமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு சிறிது நேரத்தில் ஆஸ் பத்திரியை விட்டு வெளியேற யது தெரிந்ததே.

இவர்கள் அருந்திய உணவு வகைகள் இரசாயனப் பரிசோ தனைக்கு அனுப்பப்பட்டுள் ளது.

இதுபற்றி உரிய விசாரணை நடத்தப்படும் என யாழ் அர சாங்க அதிபர் மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கு தெரி வித்துள்ளார். (இ)

### வவனியா

### வரட்சி நிவாரண வேலைகள் ஆரம்பம்

(வவனியா)

வவனியா பிரதேசத்தில் வரட்சி நிவாரண வேலைகள் இம்மாத முடிவுக்குள் மீண்டும் தொடங்கப்பட விருப்பதாக வவனியா அரசாங்க அதிபர் கே, சி. லோகேஸ்வரன் தெரி வித்தார்.

வரட்சியினுல் பாதிக்கப் பட்ட கிராமங்களின் விபரங் கள் சேகரிக்கப்படுவதாகவும் நிவாரண வேலைகளுக்காக சமூகசேவைப்பகுதி 5 லட்சம் ரூபா வழங்கியிருப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித் தார்.

# புதிய தலைவர் தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழு புதிய தலைவராக இளைப் பாறிய அதிபர் திரு கே. வைத் திலிங்கம் தெரிவு செய்யப்பட் டார். உப தலைவராக மீசாலை வடக்கு கிளையை சேர்ந்த திரு. சண்முகம் சரவணமுத்து தெரிவு செய்யப்பட்டார். (சு)

அரச அதிகாரிகள்

# "மக்கள் குறைகளை அறிந்து சேவையாற்றவேண்டும்"

(பண்டத்தரிப்பு)

பொதுமக்களின் குறைபாடு களை அனுதாபத்துடன் கேட்டு சேவையாற்றும் மனப்பக்குவம் அரச உயர் அதிகாரிகளிடம் ஏற்பட வேண்டும். உயர் அதி காரிகள் பொதுமக்களுடன் அன்புடனும், சேவை மனப் பான்மையுடனும் பழகினுல் கீழ்மட்ட ஊழியர்களும், பொதுமக்களை நன்கு மதித்து நடப்பார்கள். இந்த வகையில் இப் பகுதியில் உதவி அரசாங்க அதிபராக நீண்ட காலம் சேவையாற்றிய திரு. கோபா லரத்தினம் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும், அபிமானத் தையும் பெற்றவராக திகழ் கின்றுர்.

இவ்வாறு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக ஏழு ஆண்டுகள் கடமையாற்றி கொழும்பிலுள்ள இந்து கலாச் சார, தமிழ்மொழி அமுலாக் கல், பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்கு இடமாற்றத்தில் செல்லும் திரு. கே. கோபால ரத்தினத்திற்கு அளிக்கப்பட்ட பிரிவு உபசார வைபவத்தில் கலந்தகொண்டு உரையாற்று கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர் திரு. கு. விநோதன் கூறினுர்.

சண்டிலிப்பாய் உதவி அர சாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாதேவா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் முதலியார் வை. மகேசன், திரு. த. முத்துவேற்பிள்ளை, வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. செந்தில் வடி வேல், கிராமசேவை உத்தி யோகத்தர் திரு. எஸ். பிரான் சிஸ் ஆகியோர உட்பட பலர் உரையாற்றினர்.

திரு. கோபாலரத்தினம் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசா ரத்திற்கு நன்றி தெரிவித்து உரையாற்றினுர். [வெ]

# கைகலப்பு: யாழ்தேவி தாமதம்

(மாகோ)

கடந்த திங்கட்கிழமை காங் கேசன் துறையிலிருந்து கோட்டை நோக்கிச் சென்ற 'யாழ்தேவி' கடுகதிரயில் வண்டி மாகோ ரயில்நிலையத் தில் தரித்துநின்றவேளை உறங் கலிருக்கைப் பகுதிப்பணியாள் ஒருவருக்கும் இராணுவவீரர் சிலருக்குமிடையே நடந்த கைகலப்பினுல் அரைமணித்தி யாலம் தாமதித்தே வண்டி நிலையத்தைவிட்டுக் கிளம்பி து.

இச்சம்பவம்பற்றித் தெரி வித்த ரயில்வேபகுதியினர் இராணுவத்தினர் டிக்கட் இல் லாமல் பயணஞ் செல்ததாச வும், உறங்கலிருக்கைப் பணி யாள் அவர்களிடம் டிக்கட் டைக் கேட்டபோதே கைகல ப்பு ஏற்பட்டதாகவும் தெரி வித்தனர்.

பொலிஸார் ஸ்தலத்துக்கு வந்தே பிரச்னையைத் தீர்த்து வைத்ததாகவும் கைகலப்பு நடந்தவேளை பயணிகள் மிக வும் பதட்டமடைந்திருந்தன ரென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

# தாயார் கண்டித்ததால் மகள் தற்கொலை

(சாவகச்சேரி)

தாயார் கண்டித்ததினுல் மனமுடைந்த திருமணமா காத 22 வயது மகள் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மட்டுவில் வடக்கை சேர்ந்த கிருஷ்ணர் மங்கையர்க்கரசி யின் மரணவிசாரணையில் மேற் கண்டதகவல் தெரியவந்தது.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி என். தர் மேந்திரன் மரணவிசாரணை நடத்தினுர். சாவகச்சேரிப் பொலிஸ் கான்ஸ்டபிள் தர் மேந்திரன் சாட்சிகளை ஆஜர் செய்தார்,

காலஞ்சென்றவரின் தகப் பன் வி. கிருஷ்ணர் சகோதரி சேதுப்பிள்ளை ஆகியோர் சாட் சியமளித்தனர்,

நேரத்திற்கு வீடுவாசல் கூட் டாமைக்காகவும், மாடு ஆடு களைப் பாராமைக்காகவும் தாயார் கண்டித்ததாகவும் அதைப் பொறுக்கமாட்டாது காலஞ்சென்றவர் கிருமிநாசினி அருந்தியதாகவும் விசாரணை யில் தெரியவந்தது. மரண விசாரணை அதிகாரி தற் கொலை எனத்தீர்ப்பளித்தார். (க)

# சிமெந்து தொழிற்சாலைத் திருட்டு: சந்தேக நபர்கள் பிணையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைத் திருட்டுக் குறித்துக் கைதாகி றிமாண்டி லிருந்த மூன்று சந்தேக நபர் கள் மல்லாகம் நீதிபதியால் பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்டனர்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்ட வேலைப்பிரிவில் சுனில் விஜ யஸ்ரீ என்பவரது 350 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத் தையும் மாரசிங்கா, சுனில் என்பவர்களுடைய ரொக்கப் பணத்தையும் திருடியதாக சந்தேக நபர்களான ஐயம் பிள்ளை தேவேந்திரகுமார், பொன்னுச்சாமி செல்வம், திருநாவுக்கரசு அற்புதராஜா ஆகிய மூவர் மல்லாகம் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டு றிமாண்டில் வைக்கப் பட்டிருந்தனர்.

இவர்கள் மீண்டும் நீதிமன் றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது மூவரையும் சரீரப் பிணையில் செல்ல நீதிபதி திரு. க. வி. விக்னேஸ்வரன் அனு மதித்தார்.

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
வெலிங் ...ல்ப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
நூல்வேலி

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா நடித்த
கலைஞர் மு. கருணாநிதியின்
வண்டிக்காரன் மகன்

## ஜீ. ஜீ. நினைவாக விசேட பூசை

(பண்டத்தரிப்பு)

அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் ஐந்தாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் செல்வச்சந்நிதியில் வட்டுக்கோட்டை எம். பி, திரு. தா. திருநாவுக்கரசுவின் உபயமாக விசேட பூசையும், அதைத் தொடர்ந்து அங்குள்ள மடத்தில் அன்னதானமும் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் இதில் பங்குபற்றினர்கள்.

சாந்தி (யாழ். நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
12-2-82
'குரு' கடைசி தினமும் 153வது நிறைவு தினமும்
13th "THREE THE HARD WAY"

மனோகரா (யாழ்ப்பாணம்)
10—30, 2—15, 4—45, 7—00, 9—30
FIVE ANGRY WOMEN
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் தினசரி 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதியபிரதி)

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

Rajah
JAFFNA
LOVE BUG'S RETURNS
Daily 10—30, 2—00, 4—30, 7—00, 9—30
WALT DISNEY
Present
HERBIE GOES TO MONTECARLO
(Color by Technic
For School Children Contact Management

Regal Cinema தினசரி 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
(Jaffna) Tele 360.
CHARLS BRONSON in
STREET FIGHTER
12-2-82 முதல்
தனிமரம்

WINDSOR
(JAFFNA)
Daily 5 Shows
The first Disaster movie where every Body dies (Laughing)
11th and 12th Only
THE BIG BUS (COMEDY)
Color - Panavision
Starring; Sydney James - Barbara Windsor
An all star Passenger list is aboard in the world's first nuclear Bus on its maiden journey.
(Next Change) 13th and 14th Only
Clint Eastwood in
High Plain Drifters

## இன்றைய பலன்

தை மாதம் 29 ம் திகதி
வியாழக்கிழமை
(11—2—82)

மேடம்: அடுத்தவரை நம்புவதால் ஆபத்து மிகவுண்டு, வீண் செலவு வேண்டாம் விபரீதம் விளைத்திடுமே.

இடபம்: தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள், சுற்றுடலில் மதிப்பு உயரும், புண்ணியஸ் தலம் ஒன்றிற்கு யாத்திரை மேற்கொள்ளப்படலாம், தெய்வத்தின் துணை உண்டு.

மிதுனம்: புத்திரவழியால் புகழ் வந்துசேரும், வெளியூர் புதினமும் உண்டு, குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும், புதிய தொடர்புகள் ஏற்படும், அதன்வழி முன்னேற்றமும் மகிழ்ச்சியுமுண்டு.

கடகம்: இரக்கசிந்தை மேலிடும், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய இடத்து தொடர்புகள் ஏற்படுவதற்கு இடமுண்டு, சிலர் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள், கண்ணியமான தினம்.

சிங்கம்: வாழ்க்கையே ஒரு புதிராகத் தோன்றும் செலவினங்கள் உச்சக்கட்டத்தை அடையும், புதிதாக எதையும் ஆரம்பிக்காதிருப்பது நன்று, குடும்பத்தில் சந்தேகம் தலைதூக்காது பார்க்கவும்.

கன்னி: இனபந்துக்கள்மத்தியில் பூசல்கள் தோன்றும், மனக்குமைச்சல்களினால் வேதனைப்படுவீர்கள், சிறிய விஷபயத்துக்கும் இடமுண்டு, பிள்ளை ஒன்றின் உடல் நலம் கவலையைத்தரலாம், தெய்வ நம்பிக்கைவேண்டும்.

துலாம்: பிறருக்கு உதவுவதில் முன்னிற்பீர்கள், இதன் மூலம் பணம் செலவாகும், அரசியல்வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்ட தினம்.

விருச்சிகம்: செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும், நண்பர்களின் தொல்லைகளால் நஷ்டமடைவீர்கள், தொழில் புரியும் இடத்தில் புதிய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டி இருக்கும்.

தனு: அறிவாளிகளை மனம் நாடும், பொது விவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருட் செலவுக்கு இடம் உண்டு, சுற்றுடலில் மதிப்பு உயரும், சிலருக்கு காதல்துறைகளிலும் அனுகூலம் ஏற்படலாம்.

மகரம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள், அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும், எடுத்த கருமத்தை நடத்திமுடிப்பதில் வெற்றி அடைவீர்கள், பெரியோர் ஆதரவும் அவசியம் கிடைக்கும்.

கும்பம்: வேவு கணைதொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர், சிக்கலான பிரச்னையை இன்று தள்ளிவைப்பது விரும்பத்தக்கது, பெரியவர்களுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம். நிதானம்வேண்டும்.

மீனம்: வாழ்க்கை தென்றல் வீசும், காதல் சிட்டுக்களுக்கு கனிவான தினம், கணவன்—மனைவி உறவு அன்புகொண்டதாக இருக்கும், மற்றவர்களின் கவனத்தை திருப்புவதில் வெற்றியடைவீர்கள், சுகபோகதினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## மலையகக் கலாசாரக் குழு வடபகுதியில் சுற்றுலா

(மாவிட்டபுரம்)

மலையக கலை, கலாசாரங்களை 'ரதிபலிக்கும் 13 பேரடங்கிய குழு ஒன்று வடபகுதிக்கு வந்துள்ளது.

மலையகத்தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை ஏனைய தமிழ்மக்கள் அறிந்து கொள்ளவும் அவ்வாறு அறிந்து அவர்களுக்கு உதவக்கூடிய நிலைமை உருவாக்குவதற்காகவும் கலை, கலாச்சார நிகழ்ச்சிகள் மூலம் தமது நிலையை எடுத்து விளக்குவதற்காகவே இக்குழுவினர் இங்கு வந்துள்ளனர்.

மலையக கலை, கலாசார அபிவிருத்தி அணியின் சார்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கல்விப்பிரிவு அமைப்பாளர் திரு. வ. நாகலிங்கம் தலைமையில் வந்துள்ள இக்குழுவினர் இம்மாதம் 20ம் திகதி வரை வடபகுயில் தங்கியிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளை அளிப்பார்கள்.

தமது பிரச்னைகளை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கூத்து நிகழ்ச்சிகள் நாட்டிய நாடகங்கள், கரகம், காவடி, எழுச்சிப்பாடல்கள் நாடகம் என்பன இக்குழுவினரால் நடத்தப்படுகின்றன.

இப்பகுதியிலுள்ள பாடசாலைகளிலும் கிராமப் புறங்களிலும் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன.

## "விஞ்ஞான ஆராய்ச்சிகளை நம்மக்கள் அறியவேண்டும்"

(புலோலி)

விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப மக்கள் தமது அறிவு வளர்ச்சியையும் மேம்படுத்திக்கொள்ள வேண்டும். உலக நாடுகளிலே நடைபெறும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் பற்றி எமது மக்களுக்கு விளக்கமளிக்கப்படவேண்டும்.

இவ்வாறு பரிசோதனைக் குழாய் குழந்தைகள் பற்றி அவுஸ்திரேலிய மியூனிச் பல்கலைக்கழகப் பேராசிரியரும் பரிசோதனைக்குழாய் குழந்தைகள் ஆராய்ச்சி நிபுணருமான ஏ. எச். சதானந்தனின் விஞ்ஞானச் சொற்பொழிவிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக விலங்கியற்துறைப் பேராசிரியரும் வடமராட்சிக்கல்வி வட்ட உப தலைவருமான திரு. வீ. கே. கணேசலிங்கம் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியில் நடைபெற்ற இச்சொற்பொழிவிற்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் கணேசலிங்கம் தொடர்ந்து குறிப்பிட்டதாவது உலகம் இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் மிகச்சுருங்கிவிட்டது. இன்றைய யுகம் விஞ்ஞானயுகமாகவே இருக்கின்றது. நாள்தோறும் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியின் பயனாகப் புதிய கண்டு பிடிப்புகளைக் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப மக்கள் தமது அறிவு வளர்ச்சியையும் மேம்படுத்த வேண்டும். இதற்கு உலக நாடுகளிடையே நடைபெறும் விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவுகள் பயன்கள் பற்றி மக்களுக்கு விளங்கப்படுத்தப்பட வேண்டும்.

"சமயமும் வாழ்க்கையும்

## இணையும்போதுதான் சிறந்த வாழ்வு அமையும்"

(மாவிட்டபுரம்)

இன்றைய இளம் பிராயத்தினர் மத்தியில் சமய உணர்வு குன்றிவருவது கவலையளிக்கிறது. இளம் பிராயத்தில் சமய உணர்வை ஊட்டிவந்தால்தான் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக முடியும். சமயமும், வாழ்க்கையும் இணையும் போதுதான் சிறந்தவாழ்க்கை அமைகிறது. ஆகவே எமது இளம்பிராயத்தினருக்கு சமய உணர்வை போதித்து அவர்களை சிறந்த பிரஜைகளாக்குவதில் சமய நிறுவனங்கள் பெரும் பங்கு கொண்டு உழைக்கவேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 35ஆவது ஆண்டு பூர்த்தி விழாவிலும், இசை விழாவிலும் கலந்து தலைமை வகித்துப் பேசிய காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. இ. க. குலசேகரன் கூறினர்".

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; இன்றைய இளஞ் சந்ததியினர் மேல்நாட்டு மோகத்தினால் பீடிக்கப்பட்டு மேற்கத்திய கலை, கலாச்சாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? எமது பாரம்பரிய சமய நெறிகளைப் பேணி அதன்படி வாழ்வதா? என்று கேள்விக்குறியுடன் செயல்படும் நிலையில் அவர்களை சரியான பாதையில் இட்டுச் செல்ல வேண்டியதவசியமாகும்.

எமது சமய நெறிகளை அவர்கள் அறியவும் பின்பற்றவும் செய்வதில் சமய நிறுவனங்கள் பெரும் பங்கு வகிக்கவேண்

(7ம் பக்கம் பார்க்க)

## யாழ். பொலிசில் மேய்ப்பனைத்தேடி ஆடு அழுகிறது

(யாழ்ப்பாணம்)

களவாடப்பட்ட மறி ஆடு ஒன்று யாழ். பொலிஸ் நிலையத்தில் தனது மேய்ப்பனைத் தேடி கதறிக் கொண்டிருக்கிறது.

யாழ். முஸ்லிம் குறுக்குத் தெருவைச்சேர்ந்த சச்சி முகம்மது நலீல் என்பவர் மறி ஆடொன்றை விற்கக்கொண்டு சென்ற சமயம் அதே இடத்தைச்சேர்ந்த ஜனுப் மொஹமட் சுல்தான் என்பவர் ஆட்டையும் சந்தேக நபரையும் யாழ். பொலிசில் ஒப்படைத்தார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர்செய்யப்பட்டபோது 500 ரூபா பிணையில் செல்லுமாறும் இம்மாதம் 19ம்திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதவான் உத்தரவிட்டு உரியவரிடம் ஆட்டை ஒப்படைக்கும்படி தெரிவித்தார். (மா)

## சிற்றூழியர் தபாலதிபரானர்

(பண்டத்தரிப்பு[

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் சிற்றூழியராகக் கடமையாற்றும் திரு. அருளப்பு மத்தேஸ் தபால் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்ததைத் தொடர்ந்து தபால் அதிபர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மார்ச் மாதம் முதலாம் திகதி [தொடக்கம் தபால் அதிபராக நியமனம் வழங்கி இவருக்கு கொழும்பிலுள்ள தபால் திணைக்களம் நியமனக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது.

## பிறந்ததின வா[illegible]த்து



மனமது செம்மையானல்
மந்திரம் செபிக்க
வேண்டாம்

கரம்பொனூர் அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும்காலம்சென்ற மகேஸ்வரி (பிள்ளை)யின் கணவரும் முத்துலிங்கம் நாகராசாவின் சகோதரரும், முன்னைநாள் அகில இலங்கை பால் தொழிலாளர் சேமநல அதிகாரியும் மலைநாட்டு வியாபாரிகள் சங்கம் சவரசலவைத் தொழிலாளர் சங்க ஆலோசகரும், ஊர்காவற்றுறை வியாபாரியுமான பொன்னுத்துரை தனது 59-வது பிறந்த தினத்தை பிள்ளைகள், பேரன் சுரேஸ்குமாருடன் குமரன் ஆலயத்தில் கொண்டாடுகிறார். அவரை பெருமக்கள்: செல்வநாயகம், பற்குணம், பாலசுப்பிரமணியம், சண்முகலிங்கம் தம்பதிகளுடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர். (2241)

## விற்பனைத் திணைக்களம் தக்காளிப் பெட்டிகள் விநியோகத்திற்கான கேள்விகள்

கீழ்க்காணப்படும் அளவுகளையுடைய ஆயிரம் (1000) தக்காளிப்பழப் பெட்டிகள் விநியோகத்திற்கான கேள்விகள் 19.2.82ம் திகதி நண்பகல் 12.00 மணி வரையும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| நீளம் | 24'' |
| அகலம் | 16'' |
| உயரம் | 09'' |

பெட்டிகள் (¾) முக்கால் அங்குல கனமுடைய பாரமற்ற பலகைகளைக் கொண்டு குறுகிய காலத்திற்குள் தயாரித்து அளிக்கப்படல் வேண்டும். வேலைநாட்களில் எனது காரியாலயத்தில் மாதிரிப் பெட்டியை பார்வையிடலாம்.

கேள்விகள் அனுப்பும் உறையின் இடதுபக்க மேல்மூலையில் தக்காளிப்பழ பெட்டிகள் விநியோகத்திற்கான கேள்விகள் எனக் குறிப்பிடப்பட்டு காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் குறித்த நேரத்திற்கு முன் எனக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் 19.2.82ந் திகதி பிற்பகல் 2 30 மணிக்கு திறக்கப்படும்.

சொ. கணேசநாதன்,
பிரதி ஆணையாளர்,
விற்பனைத்திணைக்களம்,
வட பிராந்தியம்.
250, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,
5.2.82. 2227

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# நெல் இனம் அறிந்து நீதிபதி தீர்ப்பு வழங்கினர்

(சாவகச்சேரி)

வயல் வழக்கொன்றில், தான்விதைத்தது மொறுங்கன் நெல் என்றும், எதிரி விதைத்தது கறுப்பன் நெல் என்றும், வழக்காளி தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி நெல் இனத்தைப்பற்றி அறிந்தபின் தீர்ப்பு வழங்கினர்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கை வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த க. சின்னத்துரை என்பவர், வரணி இயற்றாலையைச்சேர்ந்த சி. வேலுப்பிள்ளை என்பவருக்கெதிராக, வயல்நெல்லை அறுவடை செய்ய முயற்சிப்பதை தடைசெய்யக்கோரி தாக்கல் செய்திருந்தார்.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி சி. சுரேந்திரன் அனுசரணையுடன், சட்டத்தரணி சி. நாகராசா ஆஜரானர். எதிரி சார்பில் சட்டத்தரணி செ. பாலகிருஷ்ணன் அனுசரணையுடன் சட்டத்தரணி இ. பஞ்சலிங்கம் ஆஜரானர்.

வழக்காளியான க. சின்னத்துரை சாட்சியமளிக்கையில், தான் நன்ருக உழுது பண்படுத்தி எனது வயலில் மொறுங்கன் நெல்லை விதைத்தேன். எதிரி தனது வயலில் கறுப்பன் நெல்லைவிதைத்தார். இரு பயிர்களுக்குமிடையில் வித்தியாசமிருக்கிறது என்ருர்.

வழக்கை இடைநிறுத்தஞ் செய்த நீதிபதி கமநலச்சேவை பெரும்பாக உத்தியோகத்தர் இ. மகாதேவாவை உடனடியாக வயல்நெல்லை பரார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணித்தார் நெற்பயிரை பார்வையிட்ட இ. மகாதேவா தமது அறிக்கையில் வழக்காளியின் வயலில் 'மொறுங்கன் நெல்லும்' எதிராளியின் வயலில் கறுப்பன் நெல்லும் விதைக்கப் பட்டிருப்பதாக தெரிவித்தார்.

வழக்காளியின்சாட்சியத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி எதிராளியைக் குறித்தகாணிக்குள் செல்லப்படாதென்றும் 750 ரூபா காசுப்பிணை அல்லது 1500ரூபா ஆதனப்பிணையுடன் வழக்காளியைப் பயிரை அறுவடை செய்யும்படியும் உத்தரவிங்டார். (க)

## பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம் கேள்விப் பத்திர விளம்பரம்

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் சுமார் 5000 வெற்றுச் சாக்குகள் கொள்வனவு செய்ய விரும்புபவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. திருப்பிச் செலுத்தப்படும் கட்டுப்பணம் ரூபா 250/-ம் திருப்பிச் செலுத்தப்படாத கட்டுப்பணம் ரூபா 10/-ம் ஆகியவற்றைச் சங்கத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விப்பத்திர முடிவுதிகதி 19.02.1982 மு. ப. 10.00 மணி. கேள்விப் பத்திரங்கள் 20.02.1982 மு. ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரத்தில் தெரிவு செய்யப்படுபவர்கள் 25.02.82க்கு பணத்தைச் செலுத்தி வெற்றுச்சாக்குகளை அப்புறப்படுத்தல் வேண்டும்.

பண்டத்தரிப்புப் பரிஷ்,
ப. நோ. கூ. சங்கம்,
(தி. ஞா. சின்னையா)
பொது முகாமையாளர்.
2232

# அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணித்த சின்னத்தம்பி என்னும் மறுபெயருடையயோன் பேர்க்மன்ஸ் என்பவரின் கைம்பெண் மேரி யோசேப்பின் தங்கப்பொன், 11, கதீட்ரல் வீதி, யாழ்ப்பாணம்.

மரணித்தவர்

டாக்டர் அம்புறோஸ் வால்டர் பேர்க்மன்ஸ், 11,கதீட்ரல் ரோட்டு, யாழ்ப்பாணம் தனது அற்றோணித் தத்துவகாரன் இராசையா சிவசுப்பிரமணியம், திருநெல்வேலி தெற்கு யாழ்ப்பாணம் மூலம்,

மனுதார்

இல. தத்துவம் 3631

எதிர்

கிறிஸ்ரி எதிர்மானசிங்கம், சென்ற் நிக்கலஸ் தேவாலயத்தடி, மிருசுவில்.

எதிர்வாதி

மேலே கண்டிருக்கிற இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு மாசி மாதம் 19ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதென ஆக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுபாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
தா. குலஞானம்,
பதிவாளர்.
14—12—81.

இ. சிவசுப்பிரமணியம்,
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (2215)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லூர் கந்தசாமிகோவிலுக்கும், முத்திரைச் சந்தை பிரதான பஸ்நிலையங்கட்கும் அண்மையில் பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 100 பனைமரங்களைக் கொண்ட ஐந்தரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு இல. 71, அரசடி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம், அல்லது நடராசா, ஆஸ்பத்திரி செங்கல்லடியை தொடர்பு கொள்ளவும். 2231

கணேஸ்வரி குணபாலசிங்கம் கொக்குவில் கிழக்கு பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில்(K.K.S. வீதிக்கு அண்மையில்) 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு மேற்கூறிய முகவரியில் தொடர்புகொள்ளவும். 2240

## தேவை

மா அரைக்கும் யந்திரத்தில் (கிறைண்டர்) வேலை செய்ய, நல்லொழுக்கமும், அனுபவமும் உள்ள ஒருவர் தேவை, முன்பு வேலைசெய்த ஸ்தாபனத்தின் சான்றிதழ்கள், நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 191 (53), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2243

## இணையும்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

டும்.

மற்றும் திரு. அ. சரவணமுத்து, திரு. ந. சிவப்பிரகாசம், திரு. ம சிதம்பரப்பிள்ளை, பிரமஸ்ரீ வ, குகசர்மா திரு ச. அம்பிகைபாகன், விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர். (க)

# கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல: ஈடு/3695

பரமானந்தம் பாலசிங்கமும்
பெண் ரதிமதியும் இருவரும்.
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
—வழக்காளிகள்

எதிராக

சின்னத்தம்பி சின்னையாவும்
பெண் றோசம்மாவும் இருவரும்.
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
—எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/3695ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1982ம் ஆண்டு பங்குனி மாதம் 15ம் திகதி (15-03-82) திங்கட்கிழமை காலை 10 30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## தீர்வைத் தொகை

மேற் குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 9,800/- மேலும் ரூபா 5,000/ வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1980ம் ஆண்டு ஆனி மாதம் 23ந் திகதியிலிருந்து, தீர்வைத் திகதியாகிய 1981ம் ஆண்டு மாசி மாதம் 27ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 2903 35 கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலி கோவிற்பற்று அச்சுவேலி வடக்கு இறை ''ஙங்கைக் கிளப்பு'' நில. பர. 7 3/8 பள்ளபுலம் நில. பர. 3 3/4 அரைவாசிக்கு நில. பர. 1 7/8 பள்ளபுலம் நில. பர. 4¼ மூன்று பகுதிகளும் சேர்ந்து நில. பர. 13½ ஆனல் அளந்து கண்ட நில. பர. 13 குளி 5 இதில் மேற்குப்பக்கமாக விற்ற நில. பர. 3½ நீக்கி மிகுதி நில. பர. 9 குளி 14 கிணறும் எல்லை கிழக்கு சந்தன் கணபதிக்கும் வேலன் சுந்தரத்திற்கும் ஆழ்வான் கந்தையாவுக்குரிய ஆதனங்கள். வடக்கு ஆழ்வான் கந்தையாவுக்கும் சந்தன் பொன்னனுக்கும் வெள்ளையன் பொன்னுவுக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள் மேற்கு பண்டாரி பொன்னையாவுக்கும் சின்னவன் செல்லனுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு தம்பையா பெண் சின்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் ஆனல் இதற்குள்ளிருக்கும் கிணற்றில் மேற்கெல்லைக் காணிக்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கல். K 262/67.

சி. செ. பாலசிங்கம்,
(கொமிஷனரும் மதிப்பாளரும்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
23—01—82. 22[illegible]

# "மாவட்ட அபி. சபைகளுக்கு நிதிஒதுக்கீடு பற்ருதுள்ளது"

- யாழ். அபிவிருத்திசபை உறுப்பினர்

[யாழ்ப்பாணம்]

''அரசாங்கம் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கான நிதி ஒதுக்கீட்டிலும், அதிகாரப் பங்கீட்டிலும் தெளிவான நிலையைப் பின்பற்ருததால் எமக்குக் கிடைக்கும் பணம் குறைந்தளவாயேவுள்ளது. இதனைக் கொண்டு எமது மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாதுள்ளது.''

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் டாக்டர் ஆ. நடராசா ஏழாலை வடக்கு மாகியப்புல வீதி மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

எமது அபிவிருத்தி சபைக்கு குறைந்தளவு நிதி கிடைக்கின்ற போதிலும் அதனைக் கொண்டு நாம் கல்வி, மின்சாரம், வீதிப்புனரமைப்பு போன்ற அத்தியாவசிய சேவைகளை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்காக வெளிநாடுகளிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கும் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்ருர்

இவ்வைபவத்தில் வலிதெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. சி. செபநாயகம், திரு. வீ. த திருநாவுக்கரசு (நாவேந்தன்) ஆகியோரும் உரையாற்றினர் [வெ]

# 'ஈழநாடு'

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றியுள்ளது. இந்தப்பணிக்குக் கிடைத்த அதி உயர்ந்த பரிசுதான் கடந்த ஆண்டு ஜூன் முதலாம் திகதி இடம்பெற்ற அக்கினிப் பிரவேசம்

இப்பிரதேச மக்களின் எண்ணங்களை உடனுக்குடன் வெளிப்படுத்தும் களமான இப்பத்திரிகையை ஒரே இரவில் எரித்துச் சாம்பலாக்கிவிட எடுக்கப்பட்ட [illegible] முயற்சியை தமிழ்மக்[illegible] பொய்ப்பித்து விட்டார்[illegible]

தமிழ் மக்களின் அன்பு ஆதரவும் இருக்கு[illegible] ஈழநாடு இன்னும் பல யுகங்களுக்கு நிலைத்து நின்று [illegible] யாற்றும் என்பதை உ[illegible] படக் கூறலாம்.

## கலைவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்ரன் [illegible]ல்லூரியில். வேதரடைப்பு சோலையான் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் கலைவிழா நடைபெற்றது (க)

'ஈழநாடு' நிருபர் கா[illegible]

(யாழ்[illegible])

'ஈழநா[illegible] [illegible] கையின் கொ[illegible] திரு. சிங்கர[illegible] இவரின் ஈமக்[illegible] மிருசுவிலில் நடைபெற்றது.

## "மயங்கிய நிலையிலிருந்தவரை டாக்டர் பரிசோதித்து இறந்துவிட்டதாகச்சென்னார்"

### கைலாசபிள்ளையார் கோவிலடி கொலைவழக்கில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"நான் யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பகுதியில் கடமையாற்றிக்கொண்டிருந்த பொழுது அருளானந்தம் திருநாவுக்கரசுவை 30—7—81 இரவு 10—45 மணியளவில் மகேந்திரன் என்பவர், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கக் கொண்டுவந்தார். அவர்வரும் போது கத்திக்குத்துக் காயத்துடன் மயங்கிய நிலையிலிருந்தார். அவரை டாக்டர் பரிசோதனைசெய்தபின் இறந்துவிட்டதகத்தெரிவித்தார்."

இவ்வாறு கைலாசபிள்ளையார் கோவிலடிக் கொலை வழக்கில் நேற்று புதன்கிழமை சாட்சியமளித்த யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த மனுவேல் பிள்ளைஸ்டீபன் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஜூலை 30ம் திகதி கைலாசபிள்ளையார் கோவிலடியில் அருளானந்தம் திருநாவுக்கரசுவை, அதே இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் வைகுந்தவாசன் (ராதா) என்பவர் குத்திக் கொலைசெய்ததாக யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி ஜோகநாதன முன்னிலையில் வழக்கு விசாரணை நடைபெற்றுவருகிறது

எதிரிதரப்பில் சட்டத்தரணி ஜிம்மி இராஜரத்தினம் ஆஜராகி இருந்தார்.

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:

திருநாவுக்கரசுவை டாக்டர் பரிசோதனை செய்து அவர் இறந்து விட்டதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து சடலம் ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டது. பின்பு நான் யாழ். பொலிசுக்கு அறிவித்தேன்,

"இறந்தவரைக் கூட்டிக் கொண்டு வந்த மகேந்திரன் மது பாவித்திருந்ததுதென்பட்டது. இறந்தவருக்கு யார் குத்தியதென்று தெரிவிக்கவில்லை நானும் அது பற்றிக் கேட்கவில்லை

### இன்ஸ்பெக்டர்சாட்சியம்

யாழ். பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டர் கே, ஸ்ரீதரன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

"சம்பவதினம யாழ் பொலிசில் கடமை யாற்றிய பொழுது (30—7—81 இரவு 10-45 மணியளவில்) யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் முகாமிலிருந்து தொலைபேசி மூலம் கிடைத்த தகவலின் பேரில் ஆஸ்பத்திரிக்குச் சென்று இறந்த திருநாவுக்கரசுவின் சடலத்தை பார்த்தேன்.

இறந்தவரை மாட்டீன் வீதியைச் சேர்ந்த மகேந்திரன் அடையாளம் காட்டினார். அவரது வலது பக்க நெஞ்சில் வெட்டுக் காயமிருந்தது. அதே இடத்தில் நெஞ்சில் குத்துக்காயமும் காணப்பட்டது.

"மகேந்திரனை இதுபற்றி விசாரணைசெய்தேன். பின்பு நான் மகேந்திரனுடன்கைலாசபிள்ளையார் கோவிலடியில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றேன். பின்னர் மகேந்திரன் அன்ரன் யேசப் பகிரதன் சேகர், கருணைகரன் மனோகரன், இறந்தவரின் மனைவி ஆகியோரின் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்தேன் எனக்கு யேசுதாசன் உதவியாக இருந்தார், எதிரியைச் சந்திப்பதற்கு அங்கு சென்றேன். அவர் அங்கு இருக்கவில்லை. எதிரி வந்ததும் அவரை பொலிசுக்கு வருமாறு எதிரியின வீட்டாருக்குப் பணித்தேன

31.7.81 மாலை 7.40 மணியளவில் எதிரி அவரது சட்டத்தரணியுடன் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் சரணடைந்தார்.

"எதிரிக்கு எதிரான வாக்கு மூலம் அவரிடம் கூறிப் பதிவு செய்தபின் அவரைக் கைது செய்தேன் பின்பு எதிரியை நீதிமன்றத்தில் ஆஜர்செய்தேன்."

விசாரணை இம்மாதம் 18ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (மா)

### ரூ. 1,00,000...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லையா பொன்னையா முன்னிலையில் ஆஜர்செய்தார்.

வானையும் 7 மூடை சேலைகளையும் பறிமுதல்செய்த சுங்கச்சேகரிப்பாளர் வான் சாரதிக்கு இருபத்தையாயிரம் ரூபா அபராதம் விதித்தார். (மா)

## சைக்கிள் - ஸ்கூட்டர் விபத்து: ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

சைக்கிள்—ஸ்கூட்டர் விபத்தில், சைக்கிளில் வந்த 5 பிள்ளைகளின் தந்தையான அம்பலவாணர் நடேசு (40 வயது) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

நேற்று முன்தினமிரவு ஆனைக்கோட்டைப் பகுதியில் இவ்விபத்து நிகழ்ந்தது.

யாழ். சட்ட வைத்திய அதிகாரி எஸ். சரவணபவானந்தன் பிரேத பரிசோதனைசெய்தார்.

மரண விசாரணை நடத்திய பதில் நீதிவான் ஏ. அன்ரனி விசாரணை நடத்திய பின்னர் ஸ்கூட்டரில் பிரயாணஞ் செய்த ஜயாததுரை சுசிலநாதன் என்பவரை இம்மாதம் 24ந் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு, விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்

யாழ். பொலிஸ் போக்குவரத்துப் பகுதி கான்ஸ்டபிள்களான பி. மதவசகாயம், எஸ் தவராசா ஆகியோர் சாட்சிகளை ஆஜர்செய்தனர். (மா)


### பதவிகளுக்கான வெற்றிடம்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல விற்பனை ஸ்தாபனமொன்றுக்கு, பதினெட்டு வயதுக்கும் இருபத்திரண்டு வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களுக்கு, விற்பனையாளர்கள் பதவி வெற்றிடமுண்டு. விண்ணப்பதாரிகள் யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராயிருப்பதுடன் மின்சார உபகரணங்கள், காகிதாதிகள், வீட்டு அலங்காரப பொருட்கள் விற்பனையிலுள்ள தகமைகளை உறுதிப்படுத்தவேண்டும். பதவிக்காகத்தேர்ந்தெடுப்பவர்களுக்கு தகுதி அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். விளம்பர இல: 0196, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம்.


### மாணவர் கொடித்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூல் நிலையப் புனரமைப்புக்காக இம் மாதம் 25-ம் தேதி பாடசாலை மாணவர் பங்கு பற்றும் கொடித்தினம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

இம்மாதம் 22-ம் திகதி தொடக்கம் 27-ம் திகதிவரை நூலகவாரம் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (க)

## அமரர் ஜி.ஜி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

சட்டத்தரணி என். ரி. சிவஞானம் மேலும் கூறியதாவது:

"அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் எந்தக் கட்டத்திலும் தமிழ்மக்களைப் பலிகொடுக்க விரும்பவில்லை. எந்தத் தமிழ் இளைஞனையும் பலிகொடுக்க அவர் விரும்பவில்லை இன்றுள்ள அரசியல் தலைவர்கள் தங்கள் சந்தர்ப்பவாதக் கொள்கையினால் எத்தனையோ விதத்தில் தமிழ் இளைஞர்களைப் பலிகொடுத்துவருகிறார்கள்.

### தமிழினத்தை பாதுகாக்க

"தமிழினத்தை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவு தமிழ் இளைஞர்களை அநியாயமாகப் பலிகொடுக்கக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான் அவர் தீவிரவாதக் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை."

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு, ரி. சாந்தகுமார் கூறியதாவது: மாவட்ட அபிவிருத்திச் சபை தமிழ் ஈழத்தின் முதற்படி என்று கூட்டணியினர் தேர்தல் காலங்களில் கூறினார்கள். ஆனால் மாவட்டசபைகளுக்கு, கிராமசபைகளுக்கு இருந்த அதிகாரங்கள்கூட இல்லையென்றும், மாவட்ட அபிவிருத்திச் சபையினால் பயனில்லையென்று கூட்டணியினரே இன்று பகிரங்கமாகக் கூறுகின்றனர்.

### வட்டமேசை மாநாடு

"வட்டமேசை மகாநாட்டின் மூலந்தான் தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளை நிரந்தரமாகத் தீர்க்கலாமென்று அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அன்று கூறியபோது கூட்டணியினர் அதனை எதிர்த்தனர். இன்று அவர்களே வட்டமேசை மகாநாட்டை வரவேற்கின்றனர்.

"சமஷ்டி என்றும் மாவட்டசபை என்றும் தேர்தல்காலத்தில் மக்களுக்கு வாக்குறுதி அளித்துவந்த கூட்டணியினர் கடைசியில் தமிழ் ஈழக் கொள்கையை இளைஞர் மத்தியில் குத்தி, எமது பொருளாதாரத்தைபின்னடையச் செய்து விட்டார்கள்,

### பொறுத்தது போதும்

"தமிழ் இளைஞர்களைப் பொறுத்தது போதும் பொங்கி எழு என்று கூறிவந்தவர்கள் இன்று பொங்கியதுபோதும் பொறுமையாக இருங்கள் என்று கூறுகிறார்கள். அன்று கூட்டணியினர் வட்டமேசை மகாநாட்டை எதிர்த்தனர். அதேநேரத்தில் தலைவர்கள் இன்று ஜனாதிபதி மாளிகையில் ஒவ்வொரு மாதமும் வட்டமேசை மாநாடு கூடிவருகின்றார்கள்.

### சிங்களக் குடியேற்றம்

மாவட்ட அபிவிருத்திசபை அமைப்பு வந்த பின்னர் தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் வெகுவேகமாக நடைபெற்று வருகின்றது. அதேசமயம் பௌத்தமதமும் தமிழ்பிரதேசத்தில் பலவழிகளாலும் புகுத்தப்பட்டு வருகிறது.

சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் தமிழ்காங்கிரஸ் வாலிப முன்னணியை சேர்ந்த திரு. ஆர். ஆனந்தராசா திரு. மகேந்திரராஜா திருமதி அந்தோனியா சுவாமிநாதர் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

நேற்று முன்தினம் காலை குருநகரிலுள்ள அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் சிலைக்கு டாக்டர் ஏ. எல், ஏபிரகாம் தலைமையில் மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினார்கள். (மா)

## இப்படியும் நடக்கிறது

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்யூ கடந்த வாரம் காங்கேசன்துறைக்கு விஜயம் செய்திருந்தார்.

சிமெந்துத்தொழிற்சாலைக்குள் நடைபெற்ற எந்தவொருவைபவத்திலுமோ அல்லது தொழிற்சாலைக்கு வெளியே துறைமுகத்தில் நடைபெற்ற வைபவத்திலுமோ அமைச்சர் வாய் திறக்கவில்லை

இதுபற்றி அமைச்சரிடம் நிருபர் ஒருவர் கேட்டபோது—

"நான் வெறும்பேச்சாளன் இல்லை. செயல் வீரன். சொன்னால் செய்வேன். செய்துவிட்டுத்தான் சொல்வேன்..." என்று சிரித்துக்கொண்டே கூறினாராம்!

ஊடுருவி

## கடனைச்செலுத்த முடியாத இளைஞர் நஞ்சுக்குப்பலி

(சாவகச்சேரி)

நீர் இறைக்கும் யந்திரம் வாங்குவதற்காகப் பெற்ற 2000 ரூபா கடனை திருப்பி கொடுக்க முடியாததினால் கவலையடைந்த இளைஞர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

மீசாலை வடக்கைச்சேர்ந்த யோகராசாவின் (வயது 22) மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் மரணவிசாரணையை நடத்தினார்.

காலமானவரின் சகோதரி எஸ். நாகேஸ்வரி, மைத்துனி எஸ். அமிர்தாம்பிகை ஆகியோர் சாட்சியமளித்தனர்.

சாவகச்சேரி வைத்தியகலாநிதி கே. சண்முகநாதன் பிரேத பரிசோதனை நடத்தினார்.

சாட்சிகளைப் பதிவுசெய்த பின் மரணவிசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (க)

### பாராளுமன்றத் திறப்பு விழா

(கொழும்பு)

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நாடு திரும்பிய பின்னரே, புதிய கோட்டே பாராளுமன்றத்தின் திறப்பு விழா பற்றிய திகதி முடிவு செய்யப்படுமென்று அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது.

பிரதமர் இம்மாதம் 21ந் திகதி தாயகம் திரும்புவார்.

### பாரதி நூற்றாண்டு கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பாரதி நூற்றாண்டுவிழாவையொட்டி யாழ். மத்திய கல்லூரி நூல் நிலையத்தில் இன்று காலை யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. இராஜநாயகம், பாரதிநூற்றாண்டுக் கண்காட்சியைத் திறந்துவைத்துக் கருத்துரை வழங்கவுள்ளார். (மா)

### யாழ்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறையில் அபிவிருத்திஅடையபாடுபட வேண்டும்' என்றார்.

### நடா பேச்சு

அபிவிருத்திச்சபைத்தலைவர் திரு. நடராசா பேசுகையில், கிராமக்களுக்கு திறம்பட சேவையாற்றுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் நல்வழிகாட்டியாகவும் திகழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

யாழ், மாவட்ட செயலாளரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா யாழ். செயலக நிர்வாகப் பொறுப்பதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமான திரு. எம். சுப்பிரமணியம் உட்பட பலர் உரையாற்றினர். (மா)

## நிதிஅமைச்சர் அவுஸ்திரேலியா பயணம்

(கொழும்பு)

நிதியமைச்சர் திரு. ரோனி டி மெல் இன்று அவுஸ்திரேலியாவுக்கு 5 நாள் விஜயத்தை மேற்கொண்டு பயணமாகிறார்.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு அவுஸ்திரேலியாவிடமிருந்து நிதியுதவி கோரிச் செல்லும் நிதியமைச்சர், இது குறித்து அவுஸ்திலியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

## நியமனம்

(சரவணை)

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு பிரதம வைத்தியர் ஒருவர் தற்காலிகமாக நியமனம்பெற்றுள்ளார்.

### பாராளுமன்றம் 25-ல் கூடும்

(கொழும்பு)

பாராளுமன்றம் மீண்டும் இம்மாதம் 25ம் திகதி கூடும்.

### பாடசாலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

பிள்ளைகள் பாடசாலைக்குப் போகும் வழியிலோ அல்லது பாடசாலையைவிட்டு வீடுதிரும்புகையிலோவிபத்துச்குள்ளாக நேரிட்டால் விபத்துக்குள்ளான பிள்ளையின் பெற்றோர் அல்லதுபாதுகாவலருக்கு ஐயாயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்படும். இக்காப்புறுதிக்கு பிள்ளையொன்றின் வருடாந்தக்கட்டுப்பணம் ஐந்து ரூபாவாக இருக்கும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as Newspaper the General P.O., Sri Lanka Regd. Q.B.1002:6/81, P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.